அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா – 2 | மார்ச் – 2018 | மலர்-15

## சபைக்குத் தேவன் தரும் மன்னா

### நமக்காகச் சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு இரட்சகர்

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிருபையின் மன்னா வாசகர்களை வாழ்த்துகிறேன். கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் என்ற மேன்மையான தியான நாட்களில் வந்திருக்கிற நாம், அவருக்கு முன்பாக நம்மை நாமே ஆராய்ந்து அறிய தேவன் தாமே நமக்கு அருள்புரிவாராக. சிலுவையில் உயர்த்தப்பட்ட இந்த இயேசு, நமக்காகத் தமது இராஜரீகத் தோற்றத்தை இழந்தார். போர்ச்சேவகர் முட்களினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தினார்கள். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, “இதோ, இந்த மனுஷன்” என்றான் (யோவான் 19:5). யூதருக்கு இராஜாவாய்ப் பிறந்தவர் மரிக்கும்போது, தம்முடைய இராஜரீகத் தோற்றத்தை இழந்தவராய், பிலாத்துவினால் வெளியே கொண்டுவரப்பட்டார், ஏன்? நீங்களும், நானும் அவருடைய தெய்வீகத் தோற்றத்தை இவ்வுலகத்தில் உடையவர்களாய் வாழும்படியாகத்தானே. சிந்தித்து வாழ்வோமாக.

மேலும், யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள் (யோவான் 19:3). இவ்வசனத்தின்படி இயேசு தம்முடைய இராஜரீக வரவேற்பை இழந்தவராய்ச் சிலுவைக்கு அனுப்பப்பட்டார். நம்மனைவரையும் அவரின் இரட்சிப்புக்குள்ளும், இரட்சணிய சந்தோவத்திற்குள்ளும் நீதிமான்களாக வரவேற்கும்படியாகவே இந்நிலைக்குள்ளானார் என்பதை அறிவோமாக. மட்டுமல்ல; பிலாத்து இயேசுவைக் குற்றமற்றவராய்க் கண்டதினாலே, அவரை விடுதலையாக்க விரும்பினாலும், ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், நியாயமாய்த் தீர்ப்புச் செய்யாமல் அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு ஜனங்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்.

எத்தனை அநியாயமான தீர்ப்பு (யோவான் 19:16) தாம் நிரூபிக்கக்கூடிய தம்முடைய நியாயமான நீதியை நமக்காக அவர் இழந்தார். அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேதுரு 2:23). நாமும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமாக.

அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரேயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரோடுகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும், இயேசுவைநடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். யோவான் 19:17,18. தேவகுமாரனாகிய இந்த இயேசு பாவம் அறியாதவர்; பாவிகளை நேசித்தார்; பாவத்தையோ வெறுத்தார். ஆயினும் நீதிபரராகிய இயேசுவை இரண்டு கள்வரின் மத்தியில் தொங்கும்படிச்செய்தனர். இதுமட்டுமாய்ப் பிதாவின் சமுகத்தில் இருந்தவர்; பிதாவோடே பேசினவர்; பிதாவின் மடியில் இருந்தவர், இப்பொழுது கள்வரின் மத்தியில் தொங்குகிறார். எத்தனை அநியாயம்! அங்கீகரிக்கப்பட்ட தெய்வீகப் பிரசன்னத்தில் இரவு பகலாய் வாழ்ந்தவர். நம்மைப் பரிசுத்தரின் சமுகத்தில் நிறுத்தும்படியாய் இந்நிலையானார். மேலும், இவ்வுலகத்தில் இம்மட்டும் தம்மைச் சார்ந்திருந்ததான, தம்மை ஈன்றெடுத்த அன்னையையும், தமது நேசமார்பில் சார்ந்திருந்ததான அன்பின் சீடன் யோவானையும் பிரியும் தருவாயில், “இயேசு தமது தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி, அதோ, உன் தாய் என்றார் (யோவான் 19:26,27). அவர் இவ்வுலகில் இருக்கையில், அவரால் நன்மைகளைப் பெற்ற பலர் இருந்தாலும் தாம் அதிகமாய் நேசித்திருந்த, இவ்விருவரையும் விட்டுப் பிரிவது அவருக்குத் தாங்கொண்ணாத் துயரத்தைத் தந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. என்றாலும், இவ்விருவரும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கக்கூடிய ஒரு புதிய உறவை அவர் ஏற்படுத்திக் கொடுத்தார். தமது பூமிக்குரிய மனித உறவையும் இழந்தார்.

என் அன்பு வாசகர்களே! உங்களையும், என்னையும் இழந்து போகாதபடிக்கு, இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த எம்பெருமான் இயேசு, தமக்குரியதான ராஜரீகத் தோற்றத்தையும், பயபக்திக்குரிய வரவேற்பையும், நீதியுள்ள தீர்ப்பையும், தெய்வீக சமுகத்தையும், சார்ந்துகொள்ளக்கூடிய உலகப் பந்தங்களையும் இழந்தவராய்ச் சிலுவையிலே நமக்காக உயர்த்தப்பட்டார். அவருக்கு நன்றிக்கடனாக நம்முடைய இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, அவரைப் பணிந்துகொள்வோமாக.

# நினைவு கூருங்கள்

மறதி என்பது மானிடராகிய நமக்குச் சில வேளைகளில் சாதாரணமாக ஏற்படுவதுண்டு. அதை நாம் தவிர்க்க முடியாது. ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளத் தீர்மானிக்கும்போது, அதை நாம் மறப்பதில்லை.

ஒருமுறை, உபதேசத்தைக்கேட்கத் தம்மிடம் வந்த மக்களுக்கு இயேசு, அற்புதமாக உணவளித்து அவர்களை அனுப்பிவிட்டு, ஒரு படகில் ஏறி, மக்தலாவின் எல்லைகளில் வந்தார். சீஷர்கள் அப்பங்களைக் கொண்டு வர மறந்து போனார்கள். இயேசு தம் சீஷரிடம், "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினபோது, அவர்கள் தாங்கள் அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனதைச் சுட்டிக்காட்டுகிறார் என்று நினைத்தனர். ஆனால், இயேசு தாம் அற்புதமாக மக்களைப் போஷித்ததைத் தம் சீஷர்கள் நினைவுகூராததைக் குறித்து அவர்களைக் கடிந்துகொண்டார். நாம் எவற்றையெல்லாம் நினைவுகூர வேண்டுமென்று வேதவசனங்கள் நமக்குக் கூறுவதைத் தியானிப்போம்.

**1. இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூரவேண்டும் — I கொரி 11:24,25**

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், இயேசு தம் சீஷருடன் பஸ்காவைப் புசித்தது குறித்துக் கொரிந்து சபைக்கு எழுதுகிறார். இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் தம் சீஷர்களுக்குக் கொடுத்து, அப்பத்தைத் தம் சரீரத்திற்கும், ரசத்தைத் தம் இரத்தத்திற்கும் ஒப்பிட்டுக் கூறினார். பிறகு, அப்பத்தைப் புசிக்கும்போதும், பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம், இயேசு தம்மை நினைவுகூரும்படிச் சொன்னதாகப் பவுல் எழுதுகிறார். இவை, இயேசு கிறிஸ்து தம் மரணத்திற்கு முன்பு பஸ்காவை ஆசரிக்கும்போது கூறின சொற்கள். சிலுவை மரணத்தில் இயேசுவின் சரீரம் பிட்கப்பட்டது; அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. ஆகவே, நாம் பரிசுத்த பந்தியில் பங்கெடுக்கும்போதெல்லாம் இயேசுவின் சொற்களையும் அவர் மரணத்தையும் நினைவு கூரவேண்டும் என இயேசு நமக்குக் கூறுகிறார்.

**2. "...பலவீனரைத் தாங்கவும், வாங்குவதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று..'' — அப்போஸ்தலர் 20:35.**

இங்கு, பவுல் அப்போஸ்தலன் மேற்காணும் சொற்களை இயேசுவின் வாய்மொழியாக வந்த சொற்களாகக் கூறுவதைக் காண்கிறோம். ஆனால் இயேசு என்ன கூறினார்? செல்வந்தர்களாக இருப்போர் ஏழைகளுக்கு இரங்கி, தங்களிடம் அதிகமாக உள்ள பொருட்களை அவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றும், உதாரத்துவமாகக் கொடுக்கவேண்டுமென்றும் கூறியுள்ளதை சுவிசேஷங்களில் நாம் வாசிக்கலாம். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்;..." என்று லூக்கா 6:38இல் இயேசு கூறியுள்ளார். மேலும் காணிக்கைப் பெட்டியில் இரண்டு காசு போட்ட ஒரு ஏழை விதவைதான் எல்லாரையும்விட அதிகமாகப் போட்டாள் என்று இயேசு, லூக்கா 21:3 இல் கூறியிருப்பதை நாம் வாசிக்கின்றோம். நாம் உதாரத்துவமாக ஏழைகளுக்கும் ஊழியங்களுக்கும் கொடுப்பதை இயேசு விரும்புகிறார்.

3. "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக;..." – வெளி. 2:4,5.

எபேசு சபைக்கு இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலனாகிய யோவானை எழுதக்கூறின சொற்கள் இவை. எபேசு சபை, மிகவும் பிரயோசப்படும் சபையாக, ஆவியில் அனலுள்ளதாக, கர்த்தரையும் வேதவசனங்களையும் மிகவும் நேசிக்கும் சபையாக ஆதியில் இருந்தது. ஆனால், அச்சபை தன் ஆதி அன்பை இழந்துவிட்டதை இயேசு இங்குச் சுட்டிக்காட்டுகிறார். ஆகையால், அது எந்த நிலைமையிலிருந்து விழுந்தது என்பதை நினைத்து, விழுமுன்பு செய்த கிரியைகளைச் செய்யும்படியும் ஆதி அன்புக்குத் திரும்பும்படியும் கூறுகிறார்.

இத்தகைய விழுகை, விசுவாசிகள் அநேகருடைய வாழ்வில் காணப்படுகிறது. நாம் கடைசிக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய ஜீவியத்தையும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறார். ஆதி அன்பைக் கொஞ்சங்கொஞ்சமாக இழந்துகொண்டிருப்பதை நாம் உணராவிடினும், கர்த்தராகிய இயேசு நம்மை அளவுகடந்து நேசிப்பதினால், அதைக் கண்டு துக்கப்பட்டு, ஆதி அன்புக்குத் திரும்பும்படியாக அன்போடு கூறுகிறார். இன்ன நிலைமையிலிருந்து விழுந்துவிட்டோம் என்பதை நினைக்கவேண்டுமென்றும் அவர் கூறுகிறார். நாம் ஆதி அன்புக்குத் திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வோமாக.

**4. "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" — லூக்கா 17:32.**

லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்துபோனபோது, அவன் தெரிந்துகொண்ட சோதோம் நாட்டு மக்கள், பாவத்தைத் தண்ணீரைப் போலக் குடித்துக்கொண்டு வாழ்ந்தனர். தேவனாகிய கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கச் சித்தங்கொண்டார். லோத்து நீதிமானாக வாழ்ந்துகொண்டிருந்தபடியால், அவனையும் அவன் மனைவி, மற்றும் இரு குமாரத்திகளையும் அழிவினின்று காப்பாற்ற நினைத்து, அவர்களைச் சோதோமிலிருந்து வெளியேற துரிதப்படுத்தினர் பட்டணத்தை அழிக்க வந்த தேவதூதர்கள். அவர்கள் லோத்தைப் பார்த்து, "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" (ஆதி. 19:17) என்று கூறினபின்பும் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து, உப்புத் தூணானாள் (ஆதி. 19:26).

கர்த்தர் எதற்காக நம்மை லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளச் சொல்லுகிறார்? தேவதூதனால் எச்சரிக்கப்பட்டும், அவள் அதை அசட்டை செய்ததினிமித்தம் தண்டனைபெற்றாள். அவள் மனது சோதோமில் நிலைகொண்டிருந்த காரணத்தால், அவளால் அந்த வளம்பொருந்திய சமவெளியை விட்டு வரமுடியவில்லை. நாமும் அவ்வாறே இவ்வுலக இன்பங்களை ருசித்து அனுபவித்துக் கொண்டிருப்போமானால், இயேசு வரும்போது அவருடன் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட முடியவே முடியாது. ஆகையால்தான் இயேசு, லோத்தின் மனைவிக்கு நேர்ந்த சம்பவத்தைக்கொண்டு நம்மை எச்சரிக்கிறார்.

**5. "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள்."** இவை இயேசு தம் சீஷர்களுக்குக் கூறின சொற்கள் (யோவான் 15:20). இதன் பொருளென்ன? இயேசு செய்த அற்புதங்களைக் கண்டு, அவர்மேல் பொறாமைகொண்ட அவருடைய விரோதிகள், அவர் பிசாசுகளின் தலைவனான பெயல்செபூலினால் பிசாசுகளைத் துரத்துகிறார் என்றனர். இயேசுவை எவ்வாறெல்லாம் துன்பப்படுத்தி, சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள் என்பதை மத்தேயு 27:27-44 வரை வாசித்தறியலாம். எஜமானையே அவ்வாறு துன்புறுத்துவார்களென்றால், அவருடனிருந்து பணிபுரிபவர்களை இன்னும் அதிகமாகவல்லவா துன்புறுத்துவார்கள்? இதைத்தான் இயேசு தம் சீஷர்களுக்கு எடுத்துரைத்தார்.

இயேசு கூறினபடியே அவருடைய சீஷர்களுக்கும், அவர்களுக்குப் பின்பு தோன்றிய கிறிஸ்தவ மக்களுக்கும் நேர்ந்தது என்ன என்பதைச், சரித்திரம் கூறுகிறது. தோமா இந்தியாவுக்கு வந்து சுவிசேஷம் அறிவித்தபடியால் அவர் கொலை செய்யப்பட்டார். பேதுரு சிலுவையிலறையப்பட்டார். அவர் கேட்டுக்கொண்டபடியே அவரைத் தலைகீழாக அறைந்தார்கள். இயேசுவுக்குப் பிரியமாயிருந்த சீஷனாகிய யோவான், பத்மு தீமுவுக்கு நாடுகடத்தப்பட்டார். இயேசு துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதுபோன்றே அவருடைய சீஷர்களும், அவருடைய பின்னடியார் பலரும் அன்றிலிருந்து இன்றுவரை துன்பப்படுத்தப்படுகின்றனர்.

பவுலடியார் கூறுவது என்ன? “இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருந்திருக்கிறீர்களே” (I தெச. 3:3).

பவுல் அப்போஸ்தலனுக்கு ஏற்பட்ட துன்பங்களின் பட்டியலை II கொரி. 11:23-28இல் நாம் காணலாம். அவர் கூறுகிறார்: “நான் அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒரு தரம் கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பல் சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்... பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்...” ஆனால் அவைகள் ஒன்றையுங்குறித்து அவர் கவலைப்படவில்லை. இயேசுவின் சொற்களை அவர் நினைவுகூர்ந்த காரணத்தால், சமாதானத்துடன் தன் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தார்.

அன்பானவர்களே, நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளன. நாம் வேதத்தை வாசிக்கும்போது, அவ்வசனங்களைக் குறித்துக்கொண்டு அவற்றைத் தியானித்தோமானால், அவை நம் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். அவற்றை நாம் எளிதாக மறக்க முடியாது. ஆனால், நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டாத காரியங்களும் உண்டு. அவை: பிறர் நமக்கு விரோதமாகச்செய்த அநியாயங்கள், துரோகமான, கீழ்த்தரமான காரியங்கள், மற்றும் பொய்பேசி நம்மைத் தூஷித்தவை – இவற்றை, இயேசு சிலுவையில் துரோகிகளை மன்னித்ததுபோல, மன்னித்து மறந்துவிட வேண்டும். இயேசுவின் பாடு மரணத்தை நினைவுகூரும் இந்நாட்களில், அவர் கூறியுள்ள சொற்களை நாம் நினைவு கூருவோமாக.

# BILLY GRAHAM, EVANGELIST TO THE WORLD

(7 NOVEMBER 1918 - 21 FEBRUARY 2018)

Graham, a country boy turned world Evangelist, who prayed with every U.S. President from Harry S. Truman to Barack Obama, was raised on a dairy form in Charlotte. Back then, "Billy Frank", as he was called, preferred base ball to religion. "I detested going to church", he said when recalling his youth.

But in 1934, that changed. At a revival led by Traveling Evangelist Mordecai F.Ham, 15 year old Graham committed his life to serving Jesus Christ. No one was more surprised than Graham himself.

"I was opposed to Evangelism", he said but finally, I was persuaded by a friend to go to a meeting... and the Spirit of God began to speak to me as I went back night after night. One night, when the invitation was given to accept Jesus Christ, I just said "Lord I'm going." I know I was headed in a new direction."

Several years later, Graham's "new direction "led him to the Florida Bible Institue and later, Wheaten College in suburban Chickago, where he met fellow student Ruth, the daughter of medical missionaries in China. The couple graduated and married in the summer of 1943. Mr. & Mrs. Graham and their five children made their home in the mountains of North Carolina. They were married for 64 years before Ruth's death in 2007.

Billy Graham held his first official Evengelistic crusade in 1947; but, it was his 1949 Los Angeles crusade that captured the nation's attention Originally scheduled to run for three weeks, the "Tent Meetings" were extended for a total of eight weeks as hundreds of thousands of men, women and children gathered to hear Graham's messages.

On the heels of this campaign, Graham started the Billy Graham Evangelistic Association, which was incorporated in 1950. Billy Graham may be best known, however for his Evangelistic Missions and Crusades. He believed God knew no borders or nationalities. Throughout his career, Graham preached to millions in locations from Addis Ababa, Ethiopia to Zagorsis, Russia; and from Wellington, New Zealand to the National Cathedral in Washington. In 1973, Graham addressed more than one million people crowded into Yoida Plaza in Seoul, South Korea, the largest live audience of his crusades.

Graham authored 34 books, including his memoir, Just As I am (Harper Collins, 1997), Best-seller list for 18 weeks.

Throughout his life, Graham was faithful to his calling, which will be captured in the inscription to be placed on his grave marker. Preacher of the Gospel of the Lord Jesus Christ.

"There were a few times when I thought I was dying, and I saw my whole life come before me", said Graham at his Cincinnati crusade on June 24, 2002. I didn't say to the Lord, I'm a preacher, and I've preached to many people'. I said, 'Oh Lord, I'm a sinner and I still need Your forgiveness. I still need the cross." And I asked the Lord to give me peace in my heart, and He did — a wonderful peace that hasn't left me."

"He who hears my word and believes in Him who sent me... has passed from death into life" (John 5:24).

"Someday you will read or hear that Billy Graham is dead. Don't you believe a word of it. I shall be more alive than I am now. I will just have changed my address. I will have gone into the presence of God."

"I have one message : that Jesus Christ came, he died on a cross, he rose again, and he asked us to repent of our sins and receive him by faith as Lord and Saviour, and if we do, we have forgiveness of all our sins" said Graham at his final crusade in June 2005.

# ஸ்திரப்படுதல்

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராய் இருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக"

(I பேதுரு 5:10);

நாம் இப்பொழுது சிந்திக்கவிருக்கும் ஸ்திரப்படுதல் என்பது கிறிஸ்தவ ஜீவியத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். மற்ற எல்லா சீஷரோடும் ஒப்பிடும் சமயம் அப்போஸ்தலனாகிய பேதுரு இக்காரியத்தைக் குறித்துக் கூறிய எல்லாரைக் காட்டிலும் தகுதி வாய்ந்தவர் என்பதற்கு சந்தேகமில்லை. அவர் சில காலம் பின் மாற்றத்தின் பாதையில் சென்று, பின்பு சீர்பொருந்தியதே இதற்குக் காரணம். இயேசு கிறிஸ்துவோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இயேசுவை மறுதலிக்க நேர்ந்தது. ஆயினும், மனஸ்தாபத்தோடு அவர் மீண்டும் ஸ்திரப்பட கர்த்தரின் கிருபை அவருக்கு போதுமானதாக இருந்தது. ஆகவே நாமும் விழுகையில்லாத ஒரு கிறிஸ்தவ ஜீவியம் செய்து, விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றி ஜீவிப்பது இன்றியமையாததாகும்.

"நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக். 22:32). இது இயேசு கிறிஸ்துவால் பேதுரு அப்போஸ்தலனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாகும். "நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து'' என்று கூறுமுகத்தே, இயேசு மறைமுகமாகத் தம் சீஷனை ஸ்திரப்படும்படி கற்பிக்கிறார். இவ்விடம் இயேசு பேதுருவின் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு ஜெபிப்பதிலிருந்து அவர், "குணப்படு" என்று கூறுவது, விசுவாசத்தில் ஸ்திரப்படுவதையே குறிக்கின்றது என்று அறியலாம். பேதுரு இயற்கையாகவே முற்போக்கான புருஷன். பிறருக்கு ஆலோசனை பகர்வதிலும், பிறர் காரியங்களுக்கு முயற்சி எடுப்பதிலும், இத்தகைய இதர காரியங்களிலும் முன்னணியில் காணப்பட்டார். பேதுருவுக்கு விதிக்கப்பட்ட இக்கட்டளையை நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த ஜீவியங்களுக்கு உரித்தாக்க கர்த்தர்தாமே உதவி புரிவாராக.

## நாம் ஏன் ஸ்திரப்பட வேண்டும்?

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படி முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்" ( I கொரி. 1:8 ). இயேசு கிறிஸ்துவின் வருகைக்கும், நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் ஸ்திரப்படுவதற்கும் ஒரு உற்ற தொடர்பு இருப்பதை நாம் இவ்வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளலாம். நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த ஒன்றாக இருப்பது விரும்பத்தக்க ஒருநிலை அல்ல. குறை, பாவம் என்று குறிப்பிடத்தக்க எதுவும் காணப்படாத ஒன்றாக இருப்பதோடன்றி, இயேசுவோடு நெருங்கிய தொடர்பில் வளர்வதான ஒரு ஜீவியம் நமக்கு அவசியம்.

"நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" (I தெச. 3:13). II பேதுரு 3:14ஐப் படிப்போமானால் இந்த வசனத்தின் உண்மையான கருத்து புலப்படும். "கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் சிறிது முன்பு 'குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படி ஸ்திரப்படுங்கள்' என்று கவனித்தோம். கறை என்பது நமது கண்களால் எளிதில் கண்டுணரக்கூடிய ஒன்றாகும். ஆனால் பிழை என்று கூறப்படுவது கூர்ந்து கவனித்தாலன்றி கண்டுணர்வது, அரிது. இதன் காரணமாகவே சங்கீதக்காரன் கூறுகின்றார், "தனது பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்" (சங். 19:12). "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி" என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகின்றார் (I தெச. 2:10) .

மேலும், நாம் கர்த்தருடைய வழிகளில் ஸ்திரப்படவேண்டும். ஏன்? அப்பொழுதுதான் நம் காலடிகள் வழுவாமல் நம் நடை ஸ்திரப்பட்டிருக்கும். நம்முடைய நடை கர்த்தருடைய சித்தத்திற்கு இசைந்ததாக இருக்க வேண்டும். கர்த்தர் காட்டும் வழியில் செல்லும்போது, நம் நடை கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ப அமையும்.

ஆகவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில், குற்றமற்றவர்களாகவும், பிழையற்ற பரிசுத்தவான்களாகவும் நாம் இலங்குவதற்கு, ஸ்திரப்படுதல் இன்றியமையாத ஒன்று என்பது திண்ணம்.

# நிருபனின் நிருபம் ✍

கல்வாரி நாயகனாம் இயேசுவின் இனிய நாமத்தில் கிருபையும் சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக. நாட்களைக் கூட்டித் தருகிறவர், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள நமக்குத் தேவையான ஞானத்தையும், அபிஷேகத்தையும் தந்து வழிநடத்துவாராக.

இம்மாதத்தில் அரசுத் தேர்வுகளைச் சந்திக்கும் ஒவ்வொருவரது பிள்ளைகளுக்காகவும் ஊக்கமாக மன்றாடுகிறேன். ஞானத்தின் ஊற்றாகிய கர்த்தர் தாமே பிள்ளைகளுக்குத் தேவையான சுகத்தையும், ஞாபக சக்தியையும் தந்து, தெளிந்த புத்தியோடு தேர்வு எழுத அருள்செய்வாராக. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் ( II தீமோத்தேயு 1:7). ஆகவே, தைரியத்தோடும், விசுவாசத்தோடும், ஜெபத்தோடும் தேர்வு அறைக்குச் செல்லுங்கள். பெற்றோர் உங்கள் பிள்ளைகளை ஜெபத்திலே தாங்குங்கள். கூடுமானால், பணிக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பீர்களாகில் பிள்ளைகள் தேர்வு எழுதும் சமயத்தில் ஜெபத்திலே தரித்திருங்கள். நல்ல முடிவுகளை (Results) நமது பிள்ளைகள் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்த லெந்து நாட்களில், சிலுவை நாதர் இயேசுவின் அன்பையும், தியாகத்தையும் அதிகமாய் நினைத்து அவருக்கு நன்றி பலிகளைச் செலுத்துவோமாக. நம்முடைய வஸ்திரங்களை அல்ல, நம்முடைய இருதயங்களைக் கிழித்து, நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புவோமாக (யோவேல் 2:13). அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டதுபோல, நாமும் கீழ்ப்படிதலை இந்நாட்களில் கற்றுக்கொண்டு, அவருக்குப் பிரியமாய் வாழ்வோமாக (எபிரெயர் 5.8). கிருபையானது உங்களைத் தொடருவதாக.

சிலுவையின் நிழலில்
அன்பரின் ஊழியன்
**எஸ். ஆனந்த்**
**(S. Anand)**

# The Lord's Touch

In this Scripture portion, we see how the Angel of the Lord (the Lord Himself) appeared to Gideon who was threshing wheat in the winepress for fear of the Midianites who wasted the land of Israel and impoverished the people. The Angel told Gideon to go against the Midianites with his strength, and he would save Israel from them. Although Gideon pleaded with the Lord saying that his clan was the poorest in Manasseh, and that he was the least in his family, the Lord persuaded him to go and fight, for it was He who sent him.

Gideon wanted to give an offering to the Lord, and he brought a kid's meat and unleavned cakes which the Angel asked Gideon to leave on a rock. the Angel touched the meat with the tip of His staff, and fire came out of the rock, and consumed the offering. Then the Angel disappeared from Gideon's sight.

The touch of the Angel's staff worked wonders. Gideon became confident, and defeated the enemies with just 300 people chosen by the Lord.

Let us see how the Lord's touch manifested itself in the lives of a few Bible characters.

**1. A transforming touch — Genesis 32:25**

Here we read about Jacob wrestling with the Lord. The Lord touched the hollow of his thigh. It was a touch which transformed him, and Jacob would never have forgotten it.

Jacob was far away from the Lord, and a real conversion had not taken place in his life, although he was the grandson of Abraham with whom God had made a covenant. He deceived his brother Esau and his father Isaac.

Nevertheless, God chose to confront him, wrestle with him and transform his life. As He wrestled with Jacob, He touched the hollow of his thigh, and changed his name to Israel, for as prince he had power with God and men since he had prevailed.

Dear child of God, you need this touch of the Lord to change your character.

**2. An encouraging touch — I Kings 19:5&7**

Prophet Elijah did a miracle by bringing fire from heaven to consume the sacrifice laid on the altar, and he also slaughtered all the priests of Baal which infuriated Queen Jezebel the wife of king Ahab. She vowed she would kill Elijah, and this discouraged the prophet. He journeyed for a day and pleaded with the Lord to take away his life. Then he slept under a juniper tree. An angel came and woke him up, and told him to eat. There was a cake baked on the coals and a jar of water. Elijah ate and drank and lay down again. The angel woke him up a second time, and made him eat, for he had to journey a long distance. The touch of the angel of God encouranged him to fulfil the assignments God had planned for him. Discouragement comes when your expectation fails to materialise. Prophets like Elijah and Jonah fell victims to it. Only the encouraging touch of God will help you to overcome the morbid feeling caused by Satan.

**3. An emptying touch — Job 19:21**

Job was a righteous man, and God had blessed him with ten children, a lot of animals and a great number of servants. He was the greatest of all men in the east. But, soon he lost all of them, because Satan got permission from God to make Job lose everything except his life. Therefore, Job lost everything he possessed including his ten children.

He was afficted by loathsome and painful sores from the crown of his head to the soles of his feet. Job had to say, "...the hand of God hath touched me" (Job 19:21). It was an emptying touch because he was bereft of everything he was blessed with.

**4. The cleansing touch — Isaiah 6:7**

Prophet Isaiah saw a vision the year King Uzziah died. He saw the Lord sitting on a throne high and lifted up, and the skirts of His train filled the most holy part of the temple. The seraphim who stood above Him cried one to another, "Holy, holy, holy is the Lord of hosts; the whole earth is full of His glory."

Isaiah said, "Woe is me! For I am undone; because I am a man of unclean lips, and I dwell in the midst of a people of unclean lips: for mine eyes have seen the King, the Lord of hosts."

Then a seraph flew to Isaiah with a live coal taken from the altar, and touched his mouth. The touch of the live coal on his lips cleansed him of his iniquity, and purged him of his sin. His sin was completely forgiven. After this, Isaiah heard the voice of the Lord saying, "Whom shall I send? who will go for us?" Isaiah said, "Here am I; send me."

The vision of the Lord's glory changed Isaiah, and the touch of the live coal on his lips cleansed him of all his iniquity and sin so that Isaiah was sanctified for the ministry God had given him.

When you receive God's call to do the ministry, first of all, wait for confirmation from God Himself that He has called you. Next, ask God to sanctify you to do the ministry which is sacred. Since it is a ministry wherein you will have to use your mouth, you will do well to ask God to touch your lips so that the words you speak will glorify the Lord, and

fulfil the purpose for which He has sanctified you (God sanctified Isaiah's mouth, for he was chosen to be a prophet who would bring God's words of warning to the people of Israel).

**5. The touch to become God's mouthpiece — Jeremiah 1:9.**

God told Jeremiah that He had chosen him even before He formed him in his mother's womb and sanctified him before he came out of her womb. Furthermore, He ordained him as a prophet to the nations. Hearing God say those words to him, Jeremiah said, "Ah, Lord God! Behold I cannot speak: for I am a child."

When God spoke to Jeremiah directly about His intentions of using him as His prophet, and make the people of Judah turn to Him after giving up their wicked ways, Jeremiah could not take it. He was so fearful of prophesying to the unrighteous people of Judah that he said to the Lord he was but a child, and therefore, would not be able to perform well if He chose him as a prophet. Then the Lord told him not to fear the people, for He would be with him; he should go to all He would send him, and speak whatsoever He would command him to speak. Then the Lord touched Jeremiah's mouth, and told him that He had put His words in his mouth. In otherwords, the Lord wanted to use Jeremiah as His mouthpiece.

Dear children of God, when the Lord chooses you for His ministry, do not give excuses to Him. He says He will be with you. He will strengthen you, make you confident and protect you just as He protected Jeremiah from his enemies, and make you His mouthpiece by putting His words in your mouth.

Dear children of God, prepare yourselves to receive His divine touch.

# SMOOTH STONES FROM THE BROOK

## THE EVERLASTING ARMS OF JESUS

What a fellowship, what a joy divine,
Leaning on the everlasting arms;
What a blessedness, what a peace is mine,
Leaning on the everlasting arms.

Leaning, leaning,
Safe and secure from all alarms;
Leaning, leaning,
Leaning on the everlasting arms.

Oh, how sweet to walk in this pilgrim way,
Leaning on the everlasting arms;
Oh, how bright the path grows from day to day,
Leaning on the everlasting arms.

What have I to dread, what have I to fear,
Leaning on the everlasting arms?
I have blessed peace with my Lord so near,
Leaning on the everlasting arms.

*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**

L.R. Graphics, Ph : 2489 5236